DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.31/2023**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மணிகண்டன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ராஜகோபால் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2025

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், சித்தலவாயில் வசித்து வருகிறேன். நான் சித்தலவாய் விசாலாட்சி ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெங்கடேசன் எனது மச்சினன் ஆவார். 1ம் எதிரி இளையராஜா, 2ம் எதிரி கவின்குமார், 3ம் எதிரி முத்துகுமார் ஆகியோர்களை தெரியும். 24.01.2023 அன்று இரவு 09.00 மணி இருக்கும். 1ம் எதிரி இளையராஜா, 2ம் எதிரி கவின்குமார், 3ம் எதிரி முத்துகுமார் ஆகியோர்கள் வந்து நான் வேலை செய்யும் ஹோட்டலில் ஆம்ளெட் வாங்கி சென்றார்கள். மீண்டும் இரவு 10.15 மணிக்கு மேற்படி 3 எதிரிகளும் மதுபோதையில் வந்து ஆம்ளெட்டில் மண்ணெண்ணெய் வாடை அடிப்பதாக சொல்லி அ.சா.1 வெங்கடேசிடம் தகராறு செய்தார்கள்.

2. வெங்கடேசன் மண்ணெண்ணெய் பயன்படுத்துவது இல்லை என்று சொன்னார். இளையராஜா புண்டா மவனே என்று கெட்ட வார்த்தையால் திட்டி வெங்கடேசனை கன்னத்தில் அடித்து கீழே தள்ளி விட்டார். நான் தடுக்க போனேன் அப்போது கவின்குமாரும், முத்துக்குமாரும் சோடா பாட்டிலை பக்கத்து கடையில் இருந்து எடுத்து வந்து எனது இடதுபுற நெஞ்சில் அடித்தார். பக்கத்தில் உள்ளவர்கள் தடுத்தவுடன் 3 பேரும் சும்மா விட மாட்டேன் சாவடிச்சி கொன்னுபுடுவேன் என்று மிரட்டினார்கள். பக்கத்தில் உள்ளவர்கள் வந்து

தடுத்தார்கள். எனது மச்சினன் வெங்கடேசனுக்கு நெஞ்சிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. அடுத்த நாள் காலை எனது மச்சினன் கோவாக்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து கரூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. போலிசார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் ஆம்லெட்டில் மண்ணெண்ணெய் வாடை அடிப்பதாக சொல்லப்படும் நேரத்தில் அந்த இடத்தில் எத்தனை வாடிக்கையாளர்கள் எத்தனை நபர்கள் ஹோட்டலில் வேலை செய்தார்கள் என்றால் வாடிக்கையாளர்கள் ஒரு 5, 6 பேர் இருந்திருப்பார்கள் 5 வேலையாட்கள் இருந்தார்கள். மேற்படி, வாடிக்கையாளர்களுக்கும், ஹோட்டலில் வேலை செய்த நபர்களுக்கும் தெரியும் என்றால் சரிதான். போலிசார் வாடிக்கையாளர்களையும் கடையில் வேலை செய்த நபர்களையும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

2. ஹோட்டலை ஒட்டி காய்கறி கடை உள்ளது என்றால் சரிதான். பிரச்சனை பற்றி காய்கறிகாரர்களுக்கும் தெரியும் என்றால் இல்லை அவர்கள் கடையை மூடி சென்று விட்டார்கள். எனது மச்சினன் குடும்பத்தார்கள் ஹோட்டல் தொழில் இல்லாமல் 3, 4 தொழிலும் செய்கிறார்கள் என்றால் சரிதான். பால் தொழில் செய்கிறோம் என்றால் சரிதான். ஆட்டோ வைத்திருந்தோம் என்றால் சரிதான். என்னை அடித்ததாக சொல்லப்படுவதற்கு நான் மருத்துவமனை செல்ல எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் மறுநாள் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். போலிசார் வந்து சோடா பாட்டிலை எடுத்து சென்றார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் சண்டை போட்டு சென்றுவிட்டதாக சொல்லப்படும் நேரத்திற்கு பிறகு சோடா பாட்டில் அங்கு தான் கிடந்தது என்றால் எனக்கு தெரியாது.

3. நாங்கள் அடித்ததாக சொல்லி எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் நான் அடிக்கவில்லை. பட்டியல் சாட்சி 4 ராஜகோபால் எனது அப்பா என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5 கௌதம், 6 சண்முகம் விசாலாட்சி ஹோட்டலில் வேலை செய்பவர்கள் என்றால் சரிதான். இளையராஜாவை நாங்கள் அடித்ததாக அவர் உடனே கரூர் மருத்துவனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

நான் சொன்னதுபோல் அ.சா.1யும், என்னையும் யாரும் அடிக்கவில்லை, திட்டவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடையில் ஆம்ளெட்டில் மண்ணெண்ணெய் வாடை வருகிறது என்று இளையராஜா சொன்னதற்கு அ.சா.1 வெங்கடேசன் சாதி பெயரை சொல்லி திட்டியது தான் சண்டைக்கு காரணம் என்றால் அப்படி எதுவும் சொல்லவில்லை.

4. எனது மாமனார் இந்த ஊரில் செல்வாக்கு மிக்கவர் என்றால் சரியல்ல. அதனால் தான் முதல் நாள் மருத்துவமனையில் ஆஜரான இளையராஜா புகார் மீது வழக்கு போடாமல் அடுத்த நாள் மருத்துவமனையில் சேர்ந்த எங்கள் மீது வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் யாரும் சோடா பாட்டிலை பயன்படுத்தி அடிக்கவில்லை என்றாலும், சோடா பாட்டில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது மச்சினனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.08.14 09:59:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**